8th August 1966]

கனம் திரு. பூ. கக்கன் : பேராசிரியர் பெருமக்கள் பார்ட்-டைம் ஆக வந்துதான் கோச்சிங் கொடுப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Death of cattle in Villupuram

* 212 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether large number of cattle died due to a new type of disease during March 1966 in Villupuram taluk of South Arcot district; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப்கள் வழங்கல்

* 213 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முனிசிபல் நகரம் போன்ற பெரிய நகரங்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப் கார் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது வழங்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : திண்டிவனம் போன்ற நகரப் பகுதிகளில் மதுவிலக்கு வழக்குகள் கலகம் முதலியவை நடந்தால் உடனடியாக அங்கே போலீஸ் அதிகாரிகள் செல்வதற்கு வசதி இல்லை. சைக்கிளில் போகிறார்கள். அதற்குள் மறைக்கப்பட்டுவிடுகிறது. ஆகவே, முனிசிபல் நகரங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப் கார்கள் வழங்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முனிசிபல் நகரங்களுக்கு என்று இல்லை. ஒவ்வொரு சர்கிளுக்கும் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த சர்க்கிளில் தேவைப்பட்டால் கேட்டு வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மெட்ராஸ் ஸிட்டியைப் பொருத்தவரையில் நான் ஸ்டேஷன்களுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Police station at Salaigramam

* 214 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the public and public representatives have made requests recently for the establishment of a police station at Salaigramam in Paramakudi taluk, Ramanathapuram district; and

(*b*) if so, whether such a station will be located there in the near future?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

திரு. செ. சீனிவாசன் : போலீஸ் ஸ்டேஷன் ஓரிடத்தில் ஏற்படுத்துவதற்கு என்ன என்ன நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தப் பகுதியில் ஜாஸ்தி அமைதிக் குறைவாக இருந்தால், அடிக்கடி களவு போகிறது என்றால், அந்த இடங்களைப் பார்த்து ஏற்படுத்துகிறோம். இல்லாத இடங்கள் பக்கத்தில் உள்ள ஸ்டேஷன்களோடு இணைக்கப்படுகின்றன.

திருச்சி கொதிகலன் தொழிற்சாலை

*215 கேள்வி.—திரு. ம. கமலநாதன் :
திரு. வை. சங்கரன் :
திரு. செ. மாதவன் :
} கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி கொதிகலன் தொழிற்சாலை சதி வழக்கில் இது வரை கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) தற்போது மேற்படி வழக்கு எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 35.

(*b*) A criminal case has been registered in Thuvakudy Police station on 27th October 1965 and the investigations relating to this have not yet been completed.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மோசடியில் எத்தனை ரூபாய் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது ? இந்த கான்டிராக்ட் வொர்க்ஸ் சூப்ரவிஷன் மத்திய சர்க்கார் கையில் ஒப்படைக்கப்பட்டதா அல்லது நம்முடைய அரசாங்கத்தின் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததா ? பொறுப்பு யார் கையில் இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த வேலை மத்திய சர்க்காருக்காக ஸ்டேட் கவர்ன்மென்ட் பொறுப்பில் நிறைவேற்றப்பட்டு வந்தது. மொத்த நஷ்டம் எவ்வளவு என்று இப்போது சொல்வதற்கில்லை. இன்னும் அது இன்வெஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இந்த மோசடி எப்போது நடந்ததாகச் சொல்லப்படுகிறது ? எப்போது முதலாவதாக கண்டுபிடிக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அது தான் இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.